



சென்னை, காமராசர் சாலையில் நேற்று (26.1.2025) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில்,ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினை பார்வையிட்டார்கள். இந்த நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர், கே.ஆர், ஸ்ரீராம், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அரசு தலைமை வழக்கறிஞர் .பி.எஸ். ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னை, காமராசர் சாலையில் நேற்று (26.1.2025) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் ஆகியோர் தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கரகாட்டம், காவடியாட்டம் போன்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்கள்.இந்த நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் கே.ஆர். ஸ்ரீராம், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,அமைச்சர் பெருமக்கள், சட்டப்போவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னை, காமராசர் சாலையில் நேற்று (26.1.2025) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், டாக்டர் நாராயணசாமி நாயுடு வேளாண்மை விருது, சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் கோப்பைகள் ஆகிய பதக்கங்களையும், கோப்பைகளையும் பெற்றவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளார்.

### இந்தியாவின் 76வது குடியரசு நாளில்

# அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளத்தைப் போற்றுவோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு

சென்னை, ஜன. 27-

இந்தியாவின் 76வது குடியரசு நாளில் அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளத்தைப் போற்றுவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியாவின் 76ஆவது குடியரசு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**இந்தியாவின் 76-ஆவது குடியரசு நாளில், அனைவருக்கும் நீதி, சமத்துவம், மாண்பு ஆகியவற்றை உறுதிசெய்யும் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அடித்தளத்தைப் போற்றுவோம்!**

**முற்போக்கான, அனைவரையும் உள்ளடக்கிய, கனிவான இந்தியாவைக் கட்டமைக்க வேண்டிய நம் கூட்டுக் கடமையினை இந்நாள் நமக்கு நினைவூட்டட்டும்.**

**அனைவருக்கும் நம்பிக்கையும் நல்நோக்கமும் நிறைந்த குடியரசு நாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### இன்று நடைபெறுகிறது

# ‘யு.ஜி.சி. வரைவு விதிமுறைகள் 2025’ கருத்தரங்கம்!

## ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கே.அசோக்வர்தன் ஷெட்டி சிறப்புரையாற்றுகிறார்!

*சென்னை, ஜன. 27-*

*IDRM எனும் ‘இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம்’ சார்பில், தேசிய அளவிலான ‘பல்கலைக்கழக மானியக்குழு (யு.ஜி.சி.) வரைவு விதிமுறைகள் 2025’ என்ற தலைப்பில் கருத்தரங்கம், இன்று (27.1.2025 - திங்கள் கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை, ராயப்பேட்டையில் உள்ள இந்திய ஆட்சிப் பணி அமைப்பு (IAS OFFICERS ASSOCIA TION) வளாகம் திருவள்ளுவர் கூடத்தில் நடைபெறுகிறது.*

*இந்த முக்கியமான கருத்தரங்கிற்கு ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஞானஇராஜசேகரன் தலைமை வகிக்கிறார்.*

*பொருளாதார நிபுணர் டாக்டர் வெங்கடேஷ் ஆத்ரேயா அவர்கள், கருத்தரங்கின் நோக்கத்தை விளக்கி உரையாற்றுகிறார்.*

*ஓய்வு பெற்ற ஐ. ஏ.எஸ். அதிகாரியும், சென்னையில் உள்ள இந்திய கடல்சார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான கே.அசோக் வர்தன் ஷெட்டி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகிறார்.*

*பேராசிரியர் ஏ.கருணானந்தம் (சென்னை விவேகானந்தா கல்லூரியின் தலைவர்நிறைவுரையாற்றுகிறார்.*

*பேராசிரியர்கள் ஜெ.காந்திராஜ், எஸ். எச்.திலகர் மற்றும் மருதையன் (தமிழ்நாட்டின் குரல்) ஆகியோர் இந்தக் கருத்த ரங்கில் வாழ்த்துரை வழங்குவார்கள்.*

*பி. பாலமுருகன் நன்றி உரை ஆற்றுகிறார்.*

*முன்னதாக, முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களிடம் உதவியாளராகப் பணிபுரிந்த டாக்டர் கே.பொன்ராஜ் வரவேற்றுப் பேசுகிறார்.*

*இந்திரகுமார் தேரடி, இக்கருத்தரங்கின் நெறியாளராக இருந்து, நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குகிறார்.*



திருப்பத்தூரில் நடந்த மொழிப்போர் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் மாநில மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் தலைமையில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் நல்லதம்பி, ஆ.செ.வில்வநாதன், நகரக் கழகச் செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தே.பிரபாகரன், துணை அமைப்பாளர் டி.சி. கார்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாளை (ஜன. 28) நடைபெறுகிறது!

# நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (28.1.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில், பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் - ‘மாதா மாளிகை’யில் மாவட்டக் கழக அவைத் தலைவர்கள் தலைமையில் நடை பெறுகிறது.

மாவட்டச் செயாளர்கள் இரா.ஆவுடை யப்பன், டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் இக்கூட்டத்திற்கு முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் - நெல்லை மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பேரூர் மற்றும் பகுதிக் கழகங்களின் செயலாளர்கள், கழகத்தின் பல்வேறு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : பிப். 6, 7 ஆகிய நாட்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டத்துக்கு வருகை!**

**மற்றும் - கழக ஆக்கப் பணிகள்.**

அமைச்சர் **கே.என்.நேரு**
**தலைமைக் கழக முதன்மைச் செயலாளர்**
**தி.மு.க.**